# தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியை உருவாக்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

## சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு



சிவகங்கை , ஆக.22-

சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் ,மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், நிர்வாகம் மாவட்ட தொழில் மையம், ஆகியவைகள் இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட வேலை வாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இதில் அரசு சார்ந்த மற்றும் தனியார் 96; வேலை வாய்ப்பு நிறுவனங்கள் பங்கேற்றது. 2000க்கு மேல் மாணவர்கள் இளைஞர்கள் பதிவு செய்தார்கள். இதில் 613 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஆணைகளை வழங்கி கூட்டுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழி, தமிழ் நாடு, தமிழின மக்களுக்காக பல்வேறு வழியில் அயராது உழைத்தவர்.

தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர்.அவரது 80 ஆண்டுகால அரசியல் வாழ்வில் நாட்டின் வளர்ச்சிக்காகவும் மொழிக்காகவும் இனத்திற்காகவும் பாடுபட்டார். அரசின் சார்பில்அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்த வேலை வாய்ப்பு நடைபெறுகிறது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும் .தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டு சென்றவர் தலைவர் கலைஞர் . ஐந்து முறை முதல்வராக பதவியில் இருந்த பொழுது பல்வேறு சாதனைகளையும், நலத்திட்டங்களையும் செய்துள்ளார். பெண்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக தருமபுரியில் துவங்கப்பட்ட சுய மகளிர் குழு இன்று ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. இதனால் பெண்கள் சுயமாக சம்பாதித்து பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆளுங்கட்சி யா கஇருந்தாலும் சரி எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட ஒரே இயக்கம் கழகம் ஆகும். தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் அவரது எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் ஆட்சி நடத்தி வருகிறார். படித்துவிட்டு வேலைவாய்ப்பு தேடும் இளைஞர்கள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஐ.ஏ.எஸ். எம்.பி.பி.எஸ். போன்ற படிப்பிற்கு தேர்விற்கு பயிற்சிக்கு தமிழ்நாடு அரசு ருபாய் 7500உதவித் தொகை இந்த அரசால் வழங்கப்படுகிறது. எனவே வேலை வாய்ப்பிற்கும் கல்விக்கும் வழி ஏற்படுத்தி தரும் முதல்வர் அவர்களின் செயல்பாடுகளை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழக அரசு நீங்கள் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தலைவர் கலைஞர் அயராது பாடுபட்டு பணியாற்றிய வழியில் முதல்வர் தளபதி அவர்கள் மக்கள் பணியாற்றி வருகிறார். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார். முன்னதாக மாவட்ட வாழ்வாதார இயக்குனர் திருமதி வானதி வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ.காஞ்சி ரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணி முத்து, ஆகியோர் பேசினார்கள். நிகழ்ச்சியில் அரசு மகளீர் கல்லூரி முதல்வர் இந்திரா, சிவகங்கை நகர் மன்ற துணைத்தலைவர் எம்.கார்கண்ணன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ராஜலட்சுமி, கவுன்சிலர் அயூப்கான், மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதாஅண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் சர்வாதிகார அரசையும், ஆளுநரையும் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி கண்டன உரையாற்றினார். உடன் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### நீட் தேவை ரத்து செய்யாத ஒன்றிய அரசை கண்டித்து

# தென்காசி வடக்கு மாவட்டத்தில் மாபெரும் உண்ணாவிரம்!

## வே.ஜெயபாலன் - ஈ.ராஜா - முகமது அபுபக்கர் - இ.பரந்தாமன் கண்டன உரை!

தென்காசி ஆக.22

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், மாநில இளைஞர் அணி, மாணவரணி, மருத்துவர் அணிசெயலாளர்கள்ஆலோசனைப்படி நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசை கண்டித்தும், ஆளுநரை கண்டித்தும் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் தென்காசி தெற்கு,வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி,மருத்துவர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் முகேஷ், கிருஷ்ண ராஜா, மாணவர் அணி அமைப்பாளர்கள் ரமேஷ், உதயகுமார், மருத்துவர் அணி அமைப்பாளர்கள் அன்பரசன், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர் உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் பங்கேற்று உரையாற்றியதாவது.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் அதற்கு ஆதரவாக இருக்கும் ஒன்றிய அரசையும்,மாநில ஆளுநரையும் கண்டித்து கழக இளைஞர் அணி செயலாளர் விளையாட்டு மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது

நீட் தேர்வு வேண்டாம் என்பதற்கான விளக்கங்களை உள்வாங்கி ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 100 பேரிடமாவது விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு பரந்தாமன் எம்.எல்.ஏ பேசினார்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர்கள் சுந்தர மகாலிங்கம் பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தமிழ்ச்செல்வன், புனிதா,மனோகரன், ராஜதுரை,மாவட்ட பொருளாளர்கள் ஷெரிப், சரவணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்துப்பாண்டி, ஷேக் தாவுது, ஆறுமுகசாமி,சேசுராஜன் முத்துப்பாண்டி,செல்லத்துரை, சீனிவாசன், பரமகுரு,பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமிதுரை, ரவிச்சந்திரன், ராஜேஸ்வரன், தமிழ்ச்செல்வி, சமுத்திரபாண்டி, அருள், வெள்ளத்துரை, தேவதாஸ்,மாரிச்சாமி, பராசக்தி,பா.மாரிசாமி,சாகுல் ஹமீது, வேல்ச்சாமி பாண்டியன்,மகேஸ்வரி,

ஒன்றியச் செயலாளர்கள் அழகுசுந்தரம், திவான்ஒலி, அன்பழகன்,சீனித்துரை, சிவன்பாண்டியன்,ஜெயக்குமார், ரவிசங்கர்,மகேஷ் மாயவன்,சுரேஷ், லாலா சங்கரபாண்டியன்,பெரிய துரை, பொன் முத்தையா பாண்டியன்,பூசை பாண்டியன்,வெற்றிவிஜயன், ராமச்சந்திரன், கிறிஸ்டோபர்,சேர்மதுரை, கடற்கரை, மாரிமுத்து,நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன், அப்பாஸ்,அந்தோணிசாமி,பிரபாஷ்,

பேரூர் கழகச் செயலாளர்கள் குட்டி என்ற சங்கர்,சுடலை,முத்தையா, பண்டாரம்,கோபால், வெள்ளத்துரை, சிதம்பரம், ராஜராஜன்,முத்து,ரூபி பாலசுப்பிரமணியன்,டாக்டர்.செண்பக விநாயகம், மாரிமுத்து, குருசாமி, முகமது உசேன்,ஜெகதீசன், நெல்சன்,அழகேசன், லட்சுமணன்,கோபால்,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி,ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா (தென்காசி) நகர்மன்றத் தலைவர்கள் மூப்பன்கபீபுர் ரகுமான் (கடையநல்லூர்) விஜயா (புளியங்குடி)உமா மகேஸ்வரி சரவணன் (சங்கரன்கோவில்) அணி அமைப்பாளர்கள் வேலுச்சாமி, அண்ணாமலை, ராயல் கார்த்திக்,மகளிர் அணி சிவசங்கரி, சங்கீதா, திவ்யா மணிகண்டன்,மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பையா, உள்பட இளைஞர் அணி,மாணவர் அணி, மருத்துவர் அணி, நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி தென்காசி தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், ஆளுநரைக் கண்டித்தும் மாபெரும் உண்ணாவிரதம் போராட்டம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் முகேஷ், கிருஷ்ணராஜா,மாணவரணி அமைப்பாளர்கள் ரமேஷ், உதயகுமார் மருத்துவ அணி அமைப்பாளர்கள் அன்பரசன், மணிகண்டன் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது. நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் பங்கேற்று உரையாற்றினார்.உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் உண்ணாவிரதப்போராட்டத்தை மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முடித்துவைத்து பேசினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் நா.சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் ம.முத்தமிழ்ச்செல்வி, டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார் சாந்திசீனிவாசன், கே.பி.ஆர்.ஜோதிராஜன், சாமுவேல்செல்லப்பாண்டியன், எம்.ஆர்.ஆறுமுகம், வி.எஸ்.சாரதிகுமார், ம.அன்பழகன், ப.ச.சுரேஷ்குமார், க.உமாகண்ரங்கம், கே.சதிஷ்குமார், கவிதாதண்டபாணி, கே.ஆர்.திருப்பதி, எஸ்.தாமோதிரன், கே.முருகேசன், டி.சாமுடி, டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், பேரூர் செயலாளர்கள் ம.ஸ்ரீதர், எஸ்.உமா சந்திரன், டி.ரகுநாத், கே.சாம்மண்ணன், சத்தியநாராயணன், நகர மன்ற தலைவர் சங்கீதாவெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

### கூட்டாட்சி தத்துவத்தை ஒன்றிய அரசு சிதைக்க வேண்டாம்!

# மாநில பட்டியலில் கல்வி இணைக்கப்பட வேண்டும்!

## "தினத்தந்தி" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!




சென்னை, ஆக. 22 -

முதல்வரின் சுதந்திர தினஉரையில்குறிப்பிட்டபடி மக்களுக்கு நேரடி தொடர்புடைய துறைகள் அனைத்தும் மாநில பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்க வேண்டாம் என பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு அறிவுறுத்தினார்.

இதுகுறித்து "தினத்தந்தி" நாளேடு முதல்வரின் கருத்துக்கு ஆதரவு அளித்து வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:

1976ம் ஆண்டு முதல், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்கள் விடுத்துவரும் கோரிக்கைக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தினத்தன்று கடும் அழுத்தம் கொடுத்துள்ளார். ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, நமக்கென ஒரு அரசியல் சட்டத்தை மேதைகள் வடிவமைத்தனர். இந்தியா ஒரு கூட்டாட்சி கொண்ட ஜனநாயக நாடு என்ற வகையில், மத்தியில் பிரதமர் தலைமையில் மத்திய அரசாங்கமும், மாநிலங்களில் முதல் அமைச்சர்கள் தலைமையில் மாநில அரசும் இயங்கும் வகையில், இந்திய ஜனநாயகம் உருவாக்கப்பட்டது.

அப்போது, மாநில அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும்துறைகள் மாநில பட்டியலிலும், மத்திய அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும் துறைகள் மத்திய பட்டியலிலும், மத்தியமாநில அரசுகளின் கூட்டு கட்டுப்பாட்டில் இருக்கும் துறைகள் பொது பட்டியலிலும் இருக்கும் வகையில் பிரித்து, அரசியல் சட்டத்திலேயே அட்டவணைப் படுத்தப்பட்டன. அந்த வகையில், கல்வி மாநில பட்டியலில் இருக்குமாறு அரசியல் சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டிருந்தது. இந்தியா மொழி வாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டு இருந்த நிலையில், ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனி மொழி, கலாச்சாரம், பண்பாடு என்று வித்தியாச மான நிலை இருப்பதை கருத்தில் கொண்டு, கல்வி மாநில பட்டியலில் சேர்க்கப்பட்டது. அந்த வகையில், கல்வி மாநில பட்டியலில் இருந்தபோது வகுக்கப்பட்ட பாடத் திட்டத்தில் படித்த பலர், அனைத்து துறைகளிலும் பிரகாசித்தார்கள்.

இவ்வாறு மாநில பட்டியலில் கல்வி சரியான பாதையில் சென்று கொண்டிருந்தபோது, 1976ம் ஆண்டில் நெருக்கடிநிலை பிரகடனப் படுத்தப்பட்ட நேரத்தில், இந்திராகாந்தி தலைமையில் இருந்த மத்திய அரசாங்கம், மாநில பட்டியலில் இருந்த கல்வி, வனம், வன உயிரினங்கள், பறவைகள் பாதுகாப்பு, நீதி பரிபாலனம், எடைகள் மற்றும் அளவுகள் ஆகிய துறைகளை அரசியல் சட்டத்தில் உள்ள 7வது அட்டவணையில் இருக்கும் பொது பட்டியலுக்கு மாற்றியது. இதன் மூலம் கல்வி மத்தியமாநில அரசுகள் கைகளுக்கு போனது. தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சிகளுமே இதற்கு பலத்த எதிர்ப்புகளை தெரிவித்தன. ஆனால், இதுவரை இந்த கோரிக்கைகளுக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்போது, 'நீட்' தேர்வால் பல மாணவர்கள் உயிரிழந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், கல்வி மாநில பட்டியலில் இருந்திருந்தால் 'நீட்' தேர்வே வந்து இருக்காது. அல்லது ரத்து செய்யப்பட்டிருக்கும். இந்த நிலையில், சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், "மக்களுக்கு நேரடி தொடர்பு கொண்ட அனைத்தும் மாநில பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும். அதைச் செய்தால் தான் 'நீட்' போன்ற கொடூரமான தேர்வு முறையை முற்றிலுமாக அகற்ற முடியும்" என்று பேசினார். இது நியாயமான கோரிக்கை. ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும், மாநில அரசு கல்விக்குத்தான் அதிக நிதியை உருவாக்கும் நிலையில், கல்வி சம்பந்தமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் உரிமை, மாநில அரசுகளுக்கு இருக்கவேண்டும் என்றால், கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்படுவதே சரியானதாக இருக்க முடியும்.

எனவே, நெருக்கடி நிலை நேரத்தில் எடுக்கப்பட்ட எத்தனையோ முடிவுகளை விமர்சனம் செய்துவரும் பா.ஜ.க அரசு, அப்போது மாநிலப்பட்டியலில் இருந்து பொது பட்டியலுக்கு மாற்றப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்து, மீண்டும் மாநில பட்டியலுக்கே கொண்டுவர வேண்டும் என்பது கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு "தினத்தந்தி" முதல்வருக்கு துணை நிற்பதாக கருத்து தெரிவித்துள்ளது.

### ராஜஸ்தான் - கோட்டாவில் மட்டும் 22 மாணவர்கள் தற்கொலை!

# பணம் பறிக்கும் நீட், ஜே.இ.இ. பயிற்சி மையங்கள்!

ஜெய்ப்பூர், ஆக. 22 -

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் செயல்படும் நீட், ஜே.இ.இ. நுழைவு தேர்வு பயிற்சி மையங்கள் நாடு தழுவிய அளவில் பிரபலமானவை. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள், இங்கு தங்கி நுழைவு தேர்வுகளுக்கு பயிற்சி பெறுகின்றனர். நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுவதற்காக பலமணி நேரம் தொடர்ந்து படிக்க வேண்டியுள்ளதால் மன உளைச்சலுக்கு உள்ளாகும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதும் இங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் கோட்டா மாவட்டத்தில் நுழைவு தேர்வுக்கு பயிற்சி பெற்ற 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். குறிப்பாக கடந்த 18 நாட்களில் 4 பேர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதையடுத்து, மாணவர்களின் தற்கொலையைத் தடுப்பது குறித்து, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் தொடர்பான தனது விமர்சனத்தையும் கூட்டத்தில் அவர் முன்வைத்தார்.

"9 மற்றும் 10ம் வகுப்பு படிக்கும் மாண வர்களை, நுழைவு தேர்வு பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதால், அது அவர்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது. போலி பயிற்சி மையங்களிலும் சேர்ந்து மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் தங்களது பள்ளிகளுக்குச் செல்வதில்லை. அவர்களின் பாடங்களில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, நுழைவுத் தேர்வுக்குத் தயாராகி வருகின்றனர். மாணவர்கள் இரட்டைச் சுமை சுமைக் கின்றனர். இளம் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதை இனியும் பொறுத் துக் கொள்ள முடியாது. இந்த ஆண்டு மட்டும் கோட்டா பகுதியில் தற்கொலை செய்துகொண்ட 21 மாணவர்களில் 14 பேர் குறிப்பிட்ட கோச்சிங் நிறுவனத்தில் படித்தவர்களாக உள்ளனர்" என்றார்.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும், நாடு முழுவதும் சுமார் 13 ஆயிரம் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 1,834 பேர், மத்தியப் பிரதேசத்தில் 1,308 பேர், தமிழ்நாட்டில் 1,246 பேர், கர்நாடகாவில் 855 பேர், ஒடிசாவில் 834 பேர், ராஜஸ்தானில் 633 பேர் என மாணவர்களின் தற்கொலைகள் நடந்துள்ளன.

# மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிப்பு!

மேட்டூர், ஆக.22-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 13,159 கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 10,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 54.40 அடியிலிருந்து 54.70 அடியாக உயர்ந்தது.

அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 13,110 கன அடியிலிருந்து 13,159 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 8000 கன அடியிலிருந்து வினாடிக்கு 10,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர் இருப்பு 20.90 டி.எம்.சி.யாக உள்ளது.